ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

सुरमन्दिरतरुमूलनिवासः शय्या भूतलमजिनं वासः ।
सर्वपरिग्रहभोगत्यागः कस्य सुखं न करोति विरागः ॥

सुरमन्दिरतरुमूलनिवासः - தேவாலயம் அல்லது விருக்ஷமூலம் இந்த ஸ்தலங்களில் வஸிப்பது
भूतलं - பூமியின்பிரதேசமானது
शय्या - படுக்கையாயிருப்பது
अजिनं - மான்தோலானது
वासः - வஸ்திரமாயிருப்பது

सर्वपरिग्रहभोगत्यागः - இவ்விதம் ஸகலமானபோகஸாதனங்களேயும் விடுவதான
विरागः - வைராக்கியமானது
कस्य - எவனுக்குத்தான்
सुखं - ஸௌக்கியத்தை
न करोति - உண்டுபண்ணவில்லை

ஒருவன் விசேஷ வைராக்கியத்தையடைந்து போக சாதனங்களில் விருப்பத்தைவிட்டு தன் ஜீவகாலம் வரையில் எங்காகிலும் ஒரு தேவாலயத்திலோ அல்லது மரத்தின் நிழலிலோ வஸித்துக்கொண்டு பூமியைப் படுக்கையாகவும் மான்தோலே ஆடையாகவும் செய்துகொண்டு மற்றுமுள்ள விஷயபோகங்களுக்கு ஸாதனமானவஸ்துக்களில்ஆசையை அறவே ஒழித்து ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருந்தால் அவன் ஏன் ஸுகமாயிருக்கமாட்டான் வைராக்கியமென்பது சகல சுகத்திற்கும் முதன்மையான காரணம். இக்கருத்தையே—

देशबन्धु सुहृत्पुत्र पिण्डप्राणमनोधियाम् ।
पूर्वं पूर्वपरित्यागात् परमानन्दमश्नुते ॥

தம் தேசம், பந்து ஜனங்கள், மித்திரன், புத்திரன், பிராணன், மனம், புத்தி முதலானவைகளில் முன் முன் இருக்கும் வஸ்துவை அபிமானமில்லாமல் விலக்க விலக்க உத்தமமான ஆனந்தத்தை யடைகிறுன் என்றும்-

न सुखं देवराजस्य न सुखं चक्रवर्तिनः ।
यद्धि शंकरभक्तस्य मुनेरेकान्तवासिनः ॥

பூமியிலிருக்கும் அரசனுக்கும், தேவலோகத்திலிருககும் இந்திரனுக்கும், மிகவும் வைராக்கியத்தையடைந்து பகவத் தியானத்திலிருப்பவனுடைய ஆனந்தம் கிடைக்காதென்றும் ஒரு மஹான் வெளியிட்டிருக்கிறுர். ஆகையால் வைராக்கியம் முக்கியம்.

உபபத்திராதிபர்

# ஆர்ய தர்மம்.

க்ஷய வருஷம் ஐப்பசி-மீ௴ ௧௨௨


## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாகத்திற்கு கண்டனம்.

(482-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

यावज्जीवं प्रेतपत्नी उदकोपस्पर्शनं एकभुक्तमधश्शय्या

ब्रह्मचर्यं क्षारलवण मधुमांस वर्जनं चेति ॥ आपस्तम्बः ।

விதவையானவள் தன் மரணகாலம் வரையில் புண்யதீர்த்த ஸ்நாநமும், ஒரு வேளை போஜனமும், உப்பு, உறைப்பு, மது முதலியவைகளைச் சேர்க்காமலும், பூமியில் படுத்துக்கொண்டு பிர்மசர்ய விருதத்துடனிருக்கவேண்டுமென்று, ஆபஸ்தம்பர் அபிப்பிராயப்படுகிறார்.

एक एव पतिर्नार्या यावज्जीवं परायणम् ।

मृते जीवति या तस्मिन् नाऽपरं प्राप्नुयान्नरम् ॥ भारते ।

ஸ்திரீகளுக்கு மரணபரியந்தமும் ஒரே பர்த்தாதான் அவன் ஜீவித்திருந்தாலும் சரி அல்லது மரித்தாலும் சரி மற்றொருவனை அடையக்கூடாது என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

मृते भर्तरि या नारी ब्रह्मचर्ये व्यवस्थिता ।

सा मृता लभते स्वर्गं यथा ते ब्रह्मचारिणः ॥ इति पराशरः ।

எந்த ஸ்திரீயானவள் தன்பதியின் காலம் சென்ற பிறகு பிர்மசர்ய விரதானுஷ்டானத்தில் நன்கு பற்றுதலையடைந்திருக்கிறாளோ அவள் மரித்தபிறகு பிர்மசாரிகள் போல் ஸ்வர்க்கத்தை யடைகிறாள் என்று பாராசார் கருதுகின்றார்.

अज्ञानाच्च द्विजो यस्तु विधवामुद्वहेद्यदि ।

परित्यज्य च तां चैव प्रायश्चित्तं समाचरेत् ॥

யாராவது ஒரு த்விஜன் அறியாமல் விதவையை விவாகம் செய்து கொண்டால் உடனே அவளை விலக்கி விட்டு அதற்கு விதிக்கப் பட்ட பிராயசித்தத்தை செய்துகொள்ளவேண்டுமென்று ஆச்வ லாயனரிஷி சொல்லியிருக்கிறார். இவ்விதம் இன்னும் இந்தவிஷ யத்திற்குப் பல ஸ்மிருதி வசனங்களிருப்பினும் இம்மட்டோடு போதுமென்று விடுத்தனம். சுருதிகளும் அவைகளின் கருத் தைப்பின்பற்றும் கோடிக்கணக்கான ஸ்மிருதி வசனங்களும் வித வாவிவாகம் கூடாதென்று ஸ்பஷ்டமாய்க் கூச்சலிடும்பொழுது சிரத்தானந்தருக்குமாத்திரம் விதவாவிவாகத்திற்கு ஸாதகமாக சுருதிஸ்மிருதிகள் எங்கிருந்து கிடைக்கின்றனவோ தெரியவில்லை. தாம் ஒரு விஷயத்தை மனத்தில் கருதிக்கொண்டு சம்பந்தமில் லாத ஏதாவதோர் வசனத்தை அதற்குப் பிரமாணமாகக்காட்டி, ஸாமான்ய ஜனங்களை வஞ்சிப்பதால் யாது பயனைக் கருதியிருக்கி றாரோ தெரியவில்லை. வேதத்தில் நியோகத்திற்கும், புனர் விவா கத்திற்கும் வித்யாஸம் கற்பிக்கப்பட்டிருக்கவில்லை என்கிறார். இவ்விதம் எழுதியதற்கு என்ன அபிப்பிராயமென்று தெரியவில்லை. வேதங்கள் எந்தெந்தப் பதங்களுக்கு வித்யாஸமுண்டு. எவை களுக்கு வித்யாஸமில்லை என்பதை குறிப்பிடவா ஏற்பட்டிருக் கின்றன. இந்த வார்த்தைஎதற்காக இங்கு இவர் சொல்லவேண் டும். வேதமென்று பெயரைக் கூறித் தனக்குத் தோன்றியதை யெல்லாம் ஸாதித்துவிடலாமென்று எண்ணியிருப்பவர்போல் தோன்றுகிறது. நியோகம் என்ற பதத்திற்கும் புனர் விவாகத் திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இந்தப் பதங்களையே இவர் அறியாமல் இவ்விதம் கூறுவது உபயோகமில்லாத வார்த்தை யாகும்.

[illegible]

1. கலியுக ஆசாரத்திற்குப் பாராசர ஸ்மிருதியே ஆதாரமாகக் கொள்ள [illegible] ஸ்திரீகளுக்கு அவர் சொல்லும் ஆபத்தர்மம் என்னவென்பதைக் கவனிக்கவேண் டும். புருஷன் இருக்கு[illegible] எவ்வி[illegible]லும் [illegible] ஸந்நியாஸியாகிலும் புருஷன் இறந்துபோனாலும் புருஷன் [illegible] அவன் [illegible] [illegible] வேறொரு புருஷனை ஸ்திரீ [illegible] சொல்லுகிறார். — இதிலிருந்து இத

லாவது ஆபத்கால தர்மத்தைப்பற்றி இங்கு விரிவாகக் கூறவேண்டியது அவசியம் என்றும் எழுதியிருக்கிறார். இதுவும் சரியல்ல.

இங்கு கூறுவதற்கு ஆதாரமான வசனம்,

**नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पतौ ।**
**पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥**

இந்த வசனம் தான்.

இந்த வசனத்தால் தன்பதி தேசாந்திரம்சென்றுவிட்டபோதிலும் மரித்தபோதிலும் துறவியாக ஆகிவிட்டாலும் கிலீபனாக இருந்தாலும் கெட்ட நடத்தைகளை யுடையவனாயிருந்தபோதிலும் இந்த ஐந்து விதமான ஆபத்காலங்களிலும் வேறு பதியை அடையலாமென்று, விதிக்கப்படுகிறது உண்மையே.

ஆனால் எப்பொழுதும் ஸ்திரீகள் தம் பதி மரித்த உடன் மறுமணம் செய்துகொள்ளலாமென்று, இந்த வசனம் கூறுவதாகத்தப்பான அர்த்தத்தை எண்ணி நம் சிரத்தாநந்தர் மிகவும் சந்தோஷப்படுகிறார். அந்த வசனார்த்தத்தால் அற்பங்கூட அவருடைய இஷ்ட பூர்த்தி சித்திக்காது.

**मृते भर्तरि ब्रह्मचर्यं तदन्वारोहणं वा ।**

தம் பர்த்தா மரித்தவுடன் ;பிர்மசரியத்தையாவது பர்த்தாவுடன் கூட அநுமரணத்தையாவது ஸ்திரீகள் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஆசுவலாயனமஹரிஷி இந்த ஸூத்திரத்தால் வெளியிட்டிருக்கின்றார். பின்னும்,

**मृते भर्तरि साध्वी स्त्री ब्रह्मचर्ये व्यवस्थिता ।**
**स्वर्गं गच्छत्यपुत्रापि यथा ते ब्रह्मचारिणः ॥ मनुः ।**

பதிவிரதா ஸ்திரீயானவள் தன்பர்த்தா முன்பு மரித்தானேயாகில் புத்திரனில்லாவிட்டாலும் பிரம்மசரியவிரதத்தை நன்கு அனுஷ்டிக்கவேண்டும். அவ்விதம் அனுஷ்டித்தால் பிரம்மசாரிகள் போல் இவளும் சொர்க்கத்தை அடைகிறாள் என்று மநு சொல்லியிருக்கிறார். வியாஸர் முதலிய மற்றும் சில மகரிஷிகளும் இவ்விதமே அபிப்பிராயப் படுகிறார்கள். இதற்குமுன் வெளி

யிட்டிருக்கிற சுருதிகளாலும் ஸ்திரீகள் ஒரு தடவை ஒரு புருஷனைத் தான் பதியாக வரிக்கலாமென்றும் ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது. இவ்விதம் சுருதிகளாலும் அவைகளைப் பின்பற்றும் ஸ்மிருதிகளாலும் ஸ்திரீகளுக்குப் பதியின் வியோகம் நேர்ந்தால் பிர்ம்மசரிய விரதத்தையே அந்த ஜன்மாப் பூராவும் அனுஷ்டிக்க வேண்டுமென்று பறையறையப்படும் போது இவைகளைச்சற்றும் உற்றுநோக்காமல்பதியின் வியோகம் ஏற்பட்டால் ஸ்திரீகளுக்கு மறுமணம் செய்யலாமென்று சாஸ்திரங்களின் தத்வார்த்தங்களை நன்கு அறிந்தவர் போல் நடித்துக்கொண்டு எங்ஙனம் தைர்யமாய்ச் சொல்ல நம் சிரத்தாநந்தர் முன்வந்தாரோ தெரியவில்லை.

(தொடரும்.)

உபபத்திராதிபர்.

---

## ஸ்ரீ ஸரஸ்வதி விலாஸ மாணவர் சங்கத்திற்கு

# "ஸதுபதேசம்"

ஷை சங்கத்தின் 4வது வருஷோத்ஸவம் தென்னாற்காடு ஜில்லா ஸ்ரீ மாத்ருபுரத்தில் (அன்னையூர்) 15—10—26 யன்று வெகு விமர்சையாகக் கொண்டாடபபட்டது. தலைவர் பிர்மஸ்ரீ L. ராமச்சந்திரசாஸ்திரிகள் வேண்டுகோளுக்கிணங்க சென்னையிலிருந்து ப்ரமஸ்ரீ வே. ஸோமதேவசர்மா அவர்கள் விஜயம் செய்து "நமது நோக்கம்" என்பதைப்பற்றி உபந்யஸித்தார். வேதோக்தமாக ஸரஸ்வதீபூஜை நடந்தது. வருஷாந்தர அறிக்கை முடிந்தது. அக்ராஸனர் உத்திரவுப்படி உபன்யாஸகர் கீழ்க்கண்டபடி உபன்யஸித்தார்.

அனாதிமாயையால் நிர்மலமான பூர்ண ஆநந்த வடிவமான பிரும்மத்தினின்று பிரிந்து நான், எனது என வியவஹாரத்திற்குரிய ஒன்றே ஜீவனெனவும், நாம், எனவும் கூறப்படுகிறது. அத்தகைய நாம் எதை நாடி நிற்கின்றோம்? சுகத்தையே. என்? எது எப்பொருளிடமிருந்து தோன்றிற்றோ. அது அங்கே தான் லய

மடையவேண்டும். லயமடையும் வரை ஆவலடங்காது. சுகம் நேராது. இக்கருத்தே

"आनन्दो ब्रह्मेति व्यजानात्"

என்பதாதிவசனங்களால் கூறப்படுகிறது. அந்நிலையையடைய சரீரஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜம் என நான்காகப் பிரிக்கப்பட்ட 84 லக்ஷம் ஜீவராசிகளுக்கு மானிட ஜன்மாவே ஸமீபத்திலிருப்பதால் "அரிது அரிது மானிடராதல் அரிது" எனவும் "जन्तूनां नरजन्मदुर्लभं" எனவும் போற்றப்படுகிறது.

"महता पुण्यपण्येन क्रीतेयं गायनौस्त्वया"

என்றபடி பெரும்புண்யத்தின் பயனான இவ்வுடலைப் பெற்றும் ஜிவனத்திற்குவியாபாரத்தையோ, தொழிலையோ உத்யோகத்தையோ ஏற்று நிற்பது போல யோகமோ, பக்தியோ, க்ஞானமோ, தானமோ, கர்மாவோ, யாதாமொன்றைக் கைப்பற்றவேண்டும். மானிடப் பிறவியில் முற்றிலும் சுகத்தையோ துக்கத்தையோ பெற்றவன் கிடையாது. ஆனால் அனுபவிக்கும் சுகமும் துக்க மிச்ரிதமானதால் துக்கமேயாகும்.

ஆதலால் "வேதநூல் பிராயம் நூறும்" என்ற பாட்டின் மூலம் பிறவியையறுத்துப் பேரானந்தத்தையே ஆழ்வார் கோருகிறார். நமது தலையின்மேல் யமன் காத்துக்கொண்டிருக்கிறான். "முடிசார்ந்த மன்னனும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவது திண்ணம்" என்பது போல எப்போது, சாவோ நாமறியோம். காலன் வருமுன்னே" என்றபடி அவனது துக்கம் வருமுன் ஏதாவதோர் தர்மத்தைக் கைப்பற்றி நன்மை பெறவேண்டும். அதில் எது ஸுலபம். எது சீக்கிரத்தில் நற்பயனையளிப்பதெனப் பார்த்தால், இஹபர நன்மையை ஒன்றாகச் சேர்த்து நித்யகர்மானுஷ்டானம் என்பதைப பெரியோர்கள் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு கர்மாவிற்கும் இரண்டு பயனில்லாமலில்லை முக்காலத்தையுமுணர்ந்த ரிஷிகள் இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் ஏற்றவாறு விதிக்கின்றனர். தற்காலத்துக்கேற்றபடி அவரவர் வாயில் வந்தபடி பிதற்றுவதெல்லாம் ஸ்வேச்சையானவைகள். அதுவும் ஸரியானபடி கல்வியில்லாதவின் நிர்க்ஷத்தானுஷ்டித்தரம். ஆகவே சிறுவர்களுக்கு வித்யா—பல பாடங்க

களைப் போதிப்பதை நிறுத்தி மதவிஷயமான கல்வி போதிக்க வேண்டும். ஹிஸ்டரி என்ற பாடத்தில் நாகப்ரதிஷ்டை செய்த அரசமரத்தினருகே வணங்கும், ஓர் பிராமணப்படத்தைக்காட்டி கல்லையும், மண்ணையும் வணங்குபவர் நம்மவர் என்று இளம் மூளைகளைக்கொடுத்துவிடுகின்றனர். அதற்குஇடம் கொடுக்கக்கூடாது. ப்ரம்மசர்யத்தை ஸரிவரக்காப்பாற்றி ஐம்புலன்களை அடக்கி நற்பிரஜைகளைப் படைத்து விடுவது உபாத்யாயர் கடமையாகும். சிறு பிள்ளைகளுக்கு ஸ்ரீ ராமாயண பாரதங்களைக் கதை மூலம் கற்பிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் அல்லது சுக்ரவாரத்திலாவது ஆலயம் செல்லும்படி தூண்டவேண்டும். ஏதாவதொரு வகுப்பை ஏற்படுத்திக்கொண்டு வாரமொரு முறையாவது மதாசாரங்களைக் கற்பிக்கவேண்டும். நம் பணத்தைக் கொண்டு நடைபெறும் கிருஸ்தவஸ்கூல்களில் நம் பிள்ளைகள் கட்டாயமாக பைபிள் படிக்கும்படி செய்கின்றனர். தாலுக்கா போர்டு ஜில்லா போர்டு, நகாஸபை, யூனியன் முதலிய நம்மவர்கள் கூடிய ஸபையில் நடைபெறும் பள்ளிக்கூடங்களில் ஏன் கட்டாயமாக மதப் பாடம் வைக்கக்கூடாது. ஸாத்யமான வழிகளெல்லாம் மதப் படிப்பை போதிக்க ஒவ்வோர் பெற்றோரும் தூண்டவேண்டும். மதப்பற்றுகொண்ட ப்ரம்மஸ்ரீ ஹெட்மாஸ்டர் L. ராமச்சந்திர சாஸ்திரிகள் தலைமையில் நடக்கும் உங்கள் பள்ளியில் இவை நிறைவேற்றப்படுமென நம்புகிறோம். ஈசனருளால் இச்சங்கம் மேல் மேலும் விருத்தியடையும்படி வேண்டுகிறேன்.

பிறகு வந்தனோபசாரங்களுடன் சந்தன தாம்பூலமளிக்கப்பட்டு ஸபை கலைந்தது.

ராஜாராம்.
காரியதரிசி.

---

## பிருதுராஜ சரிதம்.

—(o)—

(415-பக்கத் தொடர்ச்சி)

இவ்வரசன் பிள்ளையானாலும் தண்டிக்கக் கூடியவனை தண்டிக்கவே செய்வான், சத்துருவாயினும் தண்டிக்கத்தகாதவனை

தண்டிக்கமாட்டார். பிரஜாபாலகரான இப்பிருது சக்கிரவர்த்தியானவர் பசுவின் உருவங்கொண்டவஸுமதியைக்கறந்து, பிரஜைகளுக்கு ஜீவனத்தைச் செய்வார். இவ்வரசர் தேவேந்திரனுக்குச் சமானமாய், வில்லின் நுனியால் மலைகளையுடைத்துப் பூமியைச் சமமாக்குவார்.

ஸரஸ்வதீநதி தோன்றுமிடத்தில் நூறு அச்வமேதங்கள் செய்யப்போகின்றார். விஜிதாச்வன் என்ற புத்திரனால், இந்திரனால் அபகரிக்கப்பட்ட குதிரையை மீண்டும் மீட்டுக்கொள்வார். தன்னில்லத்திலே, ஸனத்குமாரரை யாராதித்து ஞானோபதேசத்தைப்பெறப்போகின்றார். திருமாலை யாராதித்து பக்திமேலிட்டு திவ்யக்ஞானமடைந்து புகழ்பெறுவார் என்று துதித்தனர்.

அது முதற்கொண்டுதான், இவ்வுலகில் சூதமாகதர்களால் ஆசீர்வாதங்கள் செய்யப்படுகின்றன. பிறகு சந்தோஷமடைந்து பிருகுமஹாராஜன் சூதனுக்கு அநூபதேசத்தையும், மகதனுக்கு மகதநாட்டையும் அளித்தார், மரீசிமுதலான பெரியோரையும் தக்கபடியுபசரித்தார். அவர்களும் மஹாராஜனை வாழ்த்திவிட்டுத் தங்கள் தங்கள் விடுதிக்குச் சென்றார்கள்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

புண்யபூமியாகிய இந்தப்பாரத கண்டத்தில் நீதிமுறை வழுவாது அரசுபுரிந்தமன்னர்கள் பதினாறுபேர்கள் என்று மகாபாரதம் புகழ்கின்றது. அவர்களுடைய சரித்திரம் ஒவ்வொன்றும், ராஜபக்தி, ஈச்வரபக்தி, ராஜநீதி, பெண்கள் கற்புநிலை, மோக்ஷம் முதலான அறியவிஷயங்களைவிரிவாய்போதிக்கின்றது. அவற்றுள் பதினாறுவதாகக் கூறப்பட்ட பிருதுராஜனின் சரித்திரம் மேற்கூறப்பட்ட விஷயங்களை நன்குபோதித்து, ஜனங்கள் இம்மண்ணுலகில் நடந்துகொள்ளவேண்டிய வழியை யறிவித்து, விண்ணுலகில் சாச்வதவான சுகம் பெருவதற்கு ஓர் வழிகாட்டியாய் விளங்குகின்றது. இச்சரித்திரநாயகருக்கு, வன்யர், பிருது ஆதிராஜன் என்று மூன்று முக்கியமான திருநாமங்கள் உண்டு. வேனராஜனுக்கு புதல்வனானதால் வைன்யரென்றும், உலகத்தைச் சீர்படுத்தியதால் பிருது என்றும் ஜனங்கள் ரஞ்ஜிக்க, அரசுபுரிந்தவர்களில் முதல்வனானதால் ஆதிராஜனென்றும், அத்திருநாமங்கள் பொருள்

வாய்ந்தவையாகின்றன. காளிதாஸர், வடமொழியில் தாமியற்றிய குமாரசம்பவத்தில், பிருதுமஹாராஜனின் பெருமையை வெளிக்காட்டியுள்ளார். அதாவது முன்பு பிருதுசக்கிரவர்த்தியின் கட்டளைப்படி மற்றைய மலைகளெல்லாம் இந்த இமயமலையைக் கன்றாகவும் மகாமேருபார்வதத்தையும் கறக்கத்தெரிந்த இடையனாகவும், ஏற்படுத்திக்கொண்டு, பூமியிலிருந்து ஒளியேறிய இரத்னங்களையும், மகிமைபொருந்திய ஓஷதிகளையும் கறந்தன. இவ்விதமாக சரித்திரத்திற்குப் பல வருஷங்களாய் ஆதாரங்களைத் தேடி, ஹரிவம்சம், ஸ்ரீபாகவதம், பாரதம், விஷ்ணுபுராணம் இவற்றை நனகுஆராய்ந்து மாணவர்முதல்முதிர்ந்தவர் வரை எளிதில் அறியும்படி ஏதோ என்சிற்றறிவிற்கெட்டியவரை, எழுதி உள்ளேன். சிற்றறிவின் தன்மைக்கேற்பப்பிழை பல பொருந்தியிருத்தல் கூடும். அவற்றை அன்பர் மன்னித்துச்சாரமானவற்றை ஏற்றுக் களிப்பார்களாக.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

# இந்தியாவின் சிறப்பு.

ஆஸ்திகர்களே! பொதுவாய் இவ்வுலகில் தற்காலம் கவனிப்போமானால் யாவரும் தன்னுடையதென்று பாவிக்கப்பட்ட வஸ்துவின் குணதோஷங்களைக் கவனியாது பிரியத்தின் மேலீட்டால் அதைப்பற்றிப் பிறரிடம் எல்லை கடந்து புகழ்ந்து பேசுவதைப் பார்க்கலாம். ஒருவன் தனது குரூபனானபுத்திரனை வாரியணைத்துத்தழுவிப் பக்கத்திலிருப்போரிடம் அப்புத்திரனின் புத்திவன்மையையும் பற்றிப் புகழ்கிறான். உண்மையில் கவனித்தால் அங்கு அவனது பிரியத்தைத் தவிர வேறு சாக்ஷிக்காணவரிதாயிருக்கும். ஒருவன் ஒன்றிரண்டு வீடுகளுள்ள தன் கிராமத்தைப் புகழ்வான். அவன் பட்டணத்திற்கு வந்தால் இது என்ன ஊர் என்று பழிப்பான். இவ்விதம் பலவழிகளில் அனுபவத்தால் காணலாம். அப்படியே,

न तत्स्वर्गेऽपि सौख्यं स्यात् दिव्यस्पर्शनभोजने ।
कुस्थानेऽपि भवेत्पुंसां जन्मनो यत्र सम्भवः ॥

ஸ்வர்க்கமாயினும் தனக்கு சௌக்கியமில்லையாம். தன் பிறந்த விடம் அல்பமாயினும் அதையே சுகமென்று நினைப்பான் என்றார். அதுபோல் இப்போது இந்தியாவின் சிறப்பு என்பதைப்பற்றிச் சொல்ல ஆரம்பிக்கிறேன். ஆனால் அதுபோலிதல்ல. ஏனெனில், இது நம் தேசமானாலும் இதன் குணகணங்களை எனக்குத் தெரிந்தமட்டில் எழுதத்துணிவதால் ஒரு சமயம் அபிமானத்தால் சில விஷயங்கள் நேர்ந்தாலும் அதைப் பொருட்படுத்தாது விசேஷமான குணங்களை நன்கு கவனித்தால் பகவானுக்கு இந்தியா தேசம் தான் பிறந்த வீடென்றும் மிக அபிமானமாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்றும் மற்றதேசங்களில் அவ்விதம் இல்லையென்பதும் தெற்றென விளங்குமென்று கொண்டே இனி விஷயத்திலிறங்குகின்றேன்.

## இந்தியாவுக்கு எல்லை.

முதலில் இந்தியாவென்ற சொல்லைச் சற்றுக் கவனித்துப் பிறகு எல்லையைத் தொடர்வாம். இச்சொல் எதிலிருந்து வந்ததென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. ஒவ்வொரு பாஷையிலும் உள்ள சொற்களின் மூலத்தைக் கவனித்தால் அதிகமாய் ஸம்ஸ்கிருதத்திலிருந்து வந்தவை என்றேற்படுமென்பது யாவருக்கும் தெரியும். இச்சொல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து தான் வந்ததென்பதைத் தடங்கலின்றிச் சொல்லி விடுவதற்கில்லை. ஏனெனில் அநேகமாய் நம் தேசத்தில் வழக்கத்திலிருக்கும் தேசம் பட்டணம் கிராமம் முதலியவைகளின் பெயர் ஸம்ஸ்கிருதத்தின் கொஞ்சம் மாறுதலுடன் தான் காணப்படுகின்றன. உதாரணமாய் மதுரை, திருச்சி, பட்டணம், காஞ்சி, என்பனவே. அது போல் இந்தியாவென்பது எப்பதத்தின் திரிபு என்பது விளங்கவில்லை. நாம் நம் தேசத்தை பாரதகண்டமென்றே சொல்கிறோம். எல்லாப் புராணங்களிலும் ஜம்பூத்வீபம் என்றும் பாரத கண்டம் என்றே காண்கிறது. அப்படியிருக்க இப்பதற்திற்கும் இந்தியாவென்பதற்கும் சம்பந்தமே இல்லை. மற்று என்ன பாஷையோ. ஆனாலும் அவ்விதம் நம் தேசத்திற்கெற்பட்டு விட்டபெயரை அவ்விதம் அனாதையாய் விட்டுவிட இஷ்டமில்லாததால் ஒருவாறு நம் ஸம்ஸ்கிருதத்தின் திரிபாகவே ஏற்றுக் கொள்வோம். ஆனால் பாரதம் என்பது திரிபல்ல. மற்று இந்து

என்று நம்மையும் பெயரிட்டழைக்கின்றனர். இப்பதத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லையென்று முன் ஒரு முறை கூறியிருக்கின்றேன். அப்பதத்திலேயே இந்தியாவென்பதும் சேர்ந்ததென்று கூறுவோம். இந்து என்றால் சந்திரன் என்றுபொருள். ஐந்தவீய என்றால் சந்திரனைச் சார்ந்தவர்கள். அல்லது சந்திரனிடத்திலிருந்து வந்தவர்கள் என்று பொருளாகும். நம் மதத்தில் இறந்த பிறகு புண்யலோகமெனப்படுகிற சந்திரலோகத்திற்குப் போய் விட்டு மறுபடியும் பூலோகத்திற்குத் திரும்புகிறோமென்பதையே ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஐந்தவீயன் என்ற பெயரை நமக்கிட்டுப் புறமதஸ்தர்கள் அழைத்திருக்கின்றனர். அவர்கள் அவ்விதம் தமது மதத்திலேற்றுக் கொள்ளாததால் நம்மை அவ்விதமழைக்கலாயினர். அப்பதமே ஒருவாறு மாறி இந்தியா வென்றும் இன்னும் மாறி இந்துவென்றுமாயிற்று. ஆகவே இந்தியாவென்றபெயரும் ஸம்ஸ்கிருதம் தானென்றேற்று நாமும் இங்கு அவ்விதமே வியவகாரம் செய்வோம். இனிப்பிரகிருதத்தைத் தொடர்வோம்.

நம் இந்தியாவுக்குக் கிழக்கே பர்மா, வங்கமகாசமுத்திரம் இதை Bay of Bengal என்கிறார்கள். தெற்கில் சமுத்திரம் இதை Indian Ocean என்கின்றனர். மேற்கில் மேற்கு ஸமுத்திரம் ஸிந்து நதியுமுண்டு. Arabian Sea என்பார்கள். வடக்கில் இமயமலை. இதன் நீளமும் அகலமும் இக்கண்டத்தின் வடக்கு தெற்கில் அதாவது காச்மீர தேசத்திலிருந்து குமாரி வரையிலும் சுமார் 1900 மைல் என்கின்றனர். காச்மீரமென்பது ஆங்கிலத்தில் Kashmere என்றும் குமாரீ என்பதை Cape of Comorin என்றும் கூறுகின்றனர். மேற்கே ஸிந்து முகம் என்ற இண்டஸ்ஸிலிருந்து காமரூபம் கிழக்குக்கோடிவரை 1800 மைல் என்றும் மொத்தம் சுற்றளவு 1632000 மைல் என்றும் கணக்கிட்டிருக்கின்றனர். காமரூபம் என்பதை Assam என்பார். இது தான் எல்லை.

இவ்விதம் எல்லையுள்ள இக்கண்டத்தைப் பாரதகண்டமென்றும் கர்மபூமிஎன்றும் புண்யபூமி என்றும் சொல்வார்கள். இதற்கு ஆர்யாவர்த்தம் என்று சொல்வதுண்டு, ஆர்யாவர்த்தமென்றால் புண்ய புருஷர்கள் வஸிக்குமிடம் என்றர்த்தம். ஆதல்பற்றியே அமரக்காரர்

आर्यावर्तः पुण्यभूमिः मध्यं विंध्य हिमागयोः ।

என்முர். ஆனல் அமரகாரரது அபிப்பிராயப்படி விந்திய பர்வதத்திற்கும் இமயமலைக்கும் மத்தியில் உள்ள பூமி ஆர்யாவர்த்தம் என்ருகிறது ஆயினும் அக்காலத்தில் விந்தியபர்வதத்திற்குத் தெற்கே அவ்வளவாக ஆர்யஸஞ்சாரமில்லாமல் ராக்ஷஸர்கள் போல் அனுகரிகர்களான காட்டுமிராண்டிகள் வஸித்துவந்தனர். இப்போது அவ்விதமில்லாமையாலும் ஆர்யாவர்த்தத்திற்குக் கூறப்பட்ட லக்ஷணங்கள் இருப்பதனுலும் மற்ற தேசங்களுக்கு நாளது வரையிலும் அத்தகைய இலக்கணமமையாததாலும் இதையும் ஆர்யாவர்த்தமென்றே வியவகரிப்போம், பொதுவாய் ஆர்யர்கள வஸிக்குமிடம் என்பதுதான் கிரமமான பொருள். இது தெரியாமல் ஆர்யர்கள் முக்காலத்தில் தேசாந்திரததிலிருந்து பாரதகண்டத்தில் பிரவேசிததனர் என்றும் ஸிந்து நதிககரையை முதலில் அடைந்தனரென்றும் அதனுல ஸிந்துவென்றுசொல்லத் தெரியாமல் ஹிந்துவென்று ஸமீபதேசத்திலுள்ள பாரஸிகதேசக்காரா கூறியதால் நாம் இந்துக்களானேமென்றும் தன்னுடைய மூடத்தனத்தைப் புத்தக ரூபமாக வெளியிட்டதை நாமும் ஒப்புக்கொள்ளவேண்டுமா இதைப்பற்றி முன்னர் ஒரு ஸமயம் விரிவாய் எழுதியிருக்கிறேனுயினும் இம்மாதிரி ஆபாஸவார்த்தையை நாமும ஒபபுககொண்டிருப்பதால அது சற்ருவது விலகாதாவென்று மறுபடியும் இங்கு கூறுகின்றேன்.

ஆர்யர்களான நாம் ஒரு போதும் தேசாந்திரத்தினின்றும் குடியேறவே இல்லை. அவ்விதமிருப்பின் நம் தேசத்தைத்தவிற ஆர்யோததமர்கள் நிறைந்த தேசம வேருென்று இன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்க வேண்டும், ஏனெனில் குடியேறின நாம் அநேகர்களது கெட்ட நடவடிக்கைகளைக் கைப்பற்றியும் கூட இன்னும் ஆர்யஸ்வபாவமான ஆஸ்திக்கியத்தையும் தேவதாராதனத்தையும் வேதசாஸ்திரங்களையும் முற்றிலும் துலைத்துவிடவில்லை. இவ்விதமிருக்க கெட்ட சம்பந்தமேயற்ற நம்முன்னேர்களும் அவர்களது தேசமும் எவ்வளவு அழகாய் வேதசாஸ்திர கோஷங்களோடுபிரகாசித்துக்கொண்டிருக்கலாமென்பதைச்சற்று நிதானபுததியுடன் ஆலோசித்துப் பாருங்கள். நமக்கே!புலப்பட்டுவிடும். (தொடரும்.)

M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

துண்டீரமகாராஜன்,

பூர்வத்தில் பிரமதேவனால் ஆகாயத்தினின்றும் சந்திராம்சமாகவருவித்த 'ஆகாயபூபதி' யானவன் தருமத்துக்காக நியமித்திருந்த திரவியங்களையபகரித்துக் கொண்டு புத்தமதத்திற் புகுந்து தெய்வபக்தியிழந்து போயினன். அந்தப் பாவத்தால் புத்திரப் பேறற்றவனாயினன்.

பின்னர் பூர்வபுண்ணிய விசேஷத்தால் கோரக்ஷ சித்தனையடையப்பெற்று வேதபாஹ்யமாகிய புத்த தருமங்களைக் கைவிட்டு வேதத்துக்கு அந்தரங்கமாகிய தருமங்களையுபதேசம் செய்யப்பெற்றுப் பின்னர் புத்தர்கூட்டங்களையும் அவர்களுக்குக் குருக்கண்மாரா யுள்ளவர்களையும் தனது நாட்டிவிராவண்ணம் ஒட்டி நீதி வழியே செங்கோல் செலுத்தி அம்பிகையின் மந்திரோபதேசமும் பெற்றுக் காஞ்சிமண்டலத்திலுள்ள சகல க்ஷேத்திரங்களையும் ஜீர்ணோத்தாரணம் செய்து தேவியினிடத்தில் மிகுந்த அன்பும் ஆராதனையும் உடையவனாய் அந்தத்தேவிபரமாகவே தனது வாழ்நாளைச்செலுத்தி அந்தத்தேவியினுடைய சகலதர்மங்களையும் மிகச்சிறப்பாக நடத்தி வந்தனன். மஹாதேவியாகிய காமாக்ஷிதேவியானவள் அந்த அரசனுடைய தர்மபரிபாலனத்துக்கு மகிழ்ந்தவளாய்த் தனது மூத்த பிள்ளையாகிய கணேசமூர்த்தியைப் பார்த்து "எனது அன்பனாகிய ஆகாசபூபதி அபுத்திரவான் என்கிற வசையைப்பெற்றுள்ளானாகையால் அவ்வசை நீங்குமாறு நீ அவனுக்குப் புத்திரனாகப்போ" என்று கட்டளையிட கணேசமூர்த்தி "யான் உலகில் யாவராலும் பிள்ளையார் பிள்ளையார் என்றே துதிக்கப்பட்டவனாயுள்ளேன். அப்பேரையுடையவனாயிருக்கின்ற யான் உனக்கன்பனாயிருக்கின்ற அவனிடத்துப் பிள்ளையாய்ப் போயிருத்தல் அடாதா? யான்போகின்றேன்" என்று விடைபெற்று அவன்பால் வந்து "ஓ, அரசனே, ஸ்ரீகாமாக்ஷி தேவியினுடைய கிருபையினால் நான் உனக்குப்புத்திரனாகவிருக்க வந்துள்ளேன்" என்று சொல்ல, அரசன் அம்மதுர மொழியைக்கேட்டு அடங்காப்பேரின்ப முற்றுத் தன் மனையாள்பால் நடந்த செய்தியைக் கூற அவள் ஈன்றவளினும் பெரிது உவந்து அணைத்து மார்போடணைக்கும்பொழுது கணேசப் பெருமான் அன்று பிறந்த பிள்ளை போலாயினர். அரசன் அக்குழந்தைக்

குச் செய்யவேண்டிய சடங்குகள் அனைத்தும் செய்யவெண்ணி
அன்றுமுதலாக நடத்திவந்து பன்னிரண்டாம் நாள் ஜாதகன்மாதி
நடத்தவேண்டித் தம்பதி சமேதனாய் ஸ்நானாதி கர்மங்களை முடித்
துக்கொண்டு தேவிசன்னிதானத்திற்குச் சென்று அவ்விடத்தில்
முன் நடத்தவேண்டிய பூஜை அர்ச்சனை ஹோமம் முதலிய
யாவும் விதிமுறையாகவும் அதிகச்சிறப்பாகவும் நடத்திப் பின்னர்
பிராம்மணாள் உண்டு மகிழும் வண்ணம் உச்சிப்பொழுதில் சமாரா
தனை நடத்தி வரும்பொழுது அகஸ்மாத்தாய்ப் பொன் மாரி ஒரு
முகூர்த்தகாலம் பொழிந்தது. அந்த அதிசயத்தைக்கண்ட அர
சன் அதன் காரணம் 'இன்னதென அறியவேண்டி அங்கு வந்தி
ருந்த ஸ்ரீ வத்ஸர் என்கிற முனிவர் முதலாயினாரைப் பணிந்து
"இது என்ன அதிசயம்" என்று கேட்க அம்முனிவர்கள் அதன்
காரணத்தைச் சொல்லமுடியாமல் மயங்கிக்கொண்டிருக்கும்பொ
ழுது மஞ்சத்தில் பன்னிரண்டுநாள் குழந்தையாகவிருந்த கணேச
மூர்த்தி மஞ்சத்தைவிட்டுக் கீழே தவழ்ந்து போஜனம் செய்து
கொண்டிருக்கும் பிராம்மண ஸ்திரீகளுடைய மத்தியிற்போய்
தன் பிதாவாகிய அரசனுடைய முகத்தைப் பார்த்து "ஓ தந்
தையே, இதன் காரணத்தை யான் சொல்லுகிறேன். பிராம்மண
போஜனத்துக்காக உன்னால் 'பார' அளவாக வைக்கப்பட்டிருந்த
பயரில் உனது சொத்தாயுள்ள பொன்னில் ஒரு பயரளவு பொன்
கலந்து விட்டது. சமையல்காரர் அதனையறியாமல் பயருடன்அந்
தப்பொன்னையும் சமைத்து மோதகமாகச் செய்து பிராம்மண பந்
தியில் படைத்தார்கள். உன்னுடைய இஷ்டதெய்வமாகிய ராஜ
ராஜேச்வரி என்னும் காமாக்ஷிதேவியானவள் ஸ்திரீகளுடைய
பந்தியில் தானும் ஒரு ஸ்திரீயைப்போல் உருவங்கொண்டு பூஜித்
துவரும்பொழுது அவளுடைய உதரத்தில்பொன்கலந்திருந்தமோ
தகமொன்றுபோயிற்று. அந்தமகிமையினால்உன்னுடையராஜ்யமா
கியஇந்தக் காஞ்சி க்ஷேத்திரத்தில் பொன்மாரிபொழிந்தது. அந்
தத்தேவியும் பந்தியில் போஜனம் செய்துகொண்டிருக்கிறாள்.
நீயும் பார்க்கலாம்" என்றனர். அரசன் அகமகிழ்ந்து ஆனந்த
பரவசனாய்க் குழந்தையுருவாய் இருக்கும் கணேசமூர்த்தியை
அழைத்துக்கொண்டு ஸ்திரீகளுடைய பந்தியிற்போய்த் தேவியி
னுடைய சமீபத்தில் நின்றபொழுது அம்பிகை அரசனைப் பார்த்
தவுடன் மறைந்துவிட்டனள். கணேசமூர்த்தி அம்பிகை உண்ட

ருளிய பரிகலத்திலிருந்த சேஷங்களையுண்டு சர்வசாஸ்திர பாரங்கதராயப் பிரகாசிக்க ஏனைய அந்தணரும் அரசரும் அம்பிகையினுடைய சேஷமேயல்லாமல் கணேசருடைய சேஷமும் கலந்திருந்த அந்தச் சேஷத்தையுண்டு சகலகலாவல்லியினுடைய கிருபைக்குப் பாத்திரராய் சகலகலா வல்லராயினர்.

அதன் பின்னர் யாவரும் தேவியினுடைய கடாக்ஷம் பெற்றிருக்கிற ஆகாசபூபதியினுடைய குமாரராகிய கணேசரிடத்திற் குருபாவனையுடையவராய் அவருக்குத் "துண்டீரப்பிரபு" என்கிற திவ்யநாமகரணம் செய்து அதன்பின்னர் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து அந்தப்பொழுதே இனி இந்தத் துண்டீரமகாராஜாவுக்கு ராஜ்யபட்டாபிஷேகமும் செய்யவேண்டுமென்றெண்ணிக்காமாக்ஷிவீற்றிருக்கும்சன்னிதானத்தில்(பச்சிமாபிமுக) மேற்கு முகமாகக் கணேச மூர்த்தியாகிய துண்டீரரை எழுந்தருளிவித்து இராஜ்யபட்டாபிஷேகம் செய்து காஞ்சி மண்டலத்தை அவர் வசமாக்கினர்,

இனித்துண்டீரருடைய சன்னிதானத்துக்குஎதிரில் போகும்போது மௌனமாய்ப் போகவேண்டிய வரலாறு:—

காஞ்சிமண்டலாதிபதியாய் அரசாளவந்த கணேசமூர்த்தி துண்டீரனென்னும் ராஜகோலத்துடன் தேவியினுடைய ஆலயத்தில்இரண்டாவதுஆவரணத்தில் தேவியினுடையதெரிசனவிசேஷமாகச் சன்னிதானத்தில் வீற்றிருந்து கிருதயுகத்தில் சாக்ஷாத் கணேசமூர்த்தியாகவேவிருந்தும் திரேதாயுகத்தில் தேவயோனி சம்பந்தமான அம்சத்திற் கலந்தும் துவாபரயுகத்தில் மநுக்களுடைய அம்சத்திற் கலந்தும் ராஜ்யபரிபாலனம் செய்து வந்து கலியுகத்தில் விக்கிரகரூபமாய்ப் பிரதிஷ்டை செய்திருக்கும் தனது பிம்பத்தில் யாவர் கண்ணுக்கும் தோன்றாது தேஜோ ரூபமாகக் கலந்து தேவியைத்தியானித்துக்கொண்டிருக்கிறாராதலால் அந்த இரண்டாவது ஆவரணத்தில் அவருக்கெதிரில் போகும்பொழுது மௌனமாய்ப் பயந்துபோவது போல் மௌனமாய்ப் போதல் வேண்டும். மௌனமாய்ப் போகாமல் வசனித்துக்கொண்டு போவாராயின் காமாக்ஷி தேவியைத் தரிசனம் செய்த பலனை இழந்தவராவர். மௌனமாய்ப் போவாராயின் அந்தத்தரிசன பலத்தையும் அரசாங்கத்தாற் சுகமும் பெறுவர்.

## சோழராஜன்.

பூர்வம் காவேரி தீரத்தில் சோழநாட்டில் அரசாண்டிருந்த விருஷவம்சத்தில் உற்பவித்த சோழன் சல்லியாபிதன் என்கிற சகோதரன் தன்னுடைய ராஜ்யத்தையபகரித்துக் கொள்ளத் துக்கமடைந்தவனாய் ராஜ்யம் ஆளுவதில் துன்பமுற்று அரசாக்ஷியை வெறுத்துத் தன் பத்தினியை யழைத்துக்கொண்டு தேசசஞ்சாரியாய் வரும்பொழுது தெய்வகதியாய்க் காமகோட்டம் வந்து சேர்ந்து நந்தனவனங்கள் வைத்து விருத்திசெய்து நாடோறும் தவறாமல் மலர்களைக்கொய்து யானைத்துதிக்கைபோலும் மாலைகளைக்கட்டிக் காமாக்ஷி தேவிக்குச் சமர்ப்பித்துத் தியானித்து வழிபட்டுவந்தனன். தேவியினுடைய கிருபையால் பெண்குழந்தையொன்று பிறந்து நாளொரு மேனியாய் வளர்ந்து அங்கங்களெல்லாம் அழகு நிறையப்பெற்றிருக்கும் நாளில் பாண்டி நாடாளும் குலசேகரபாண்டியன் மகனுக்குரிய பெண் வேண்டும் என்று எல்லாவரசர்கட்கும் தெரிவித்தனன், ஒரு நாள் அவனுடைய கனவில் காமாக்ஷிதேவியானவள் சென்று, "ஓ, அரசனே என்னுடைய காஞ்சி நகரத்தில் விக்கிரமசோழனென்கிற அரசன் தன் ராஜ்ஜியத்தைவிட்டுத் தன் பத்தினியுடன் தேசசஞ்சாரியாயிருந்து பின்னர் காமகோட்டத்தை யடைந்து என்னிடத்தில் மிக்கவன்புடன் வந்தனை வழிபாடுகள் செய்து வருகின்றனன். அவனுக்கு என்னுடைய கிருபையினால் ஒரு புத்திரியுண்டாயிருக்கிறாள். அவளுடைய ரூபலாவண்ய சுந்தரங்களை நானிப்பொழுது சொல்லவேண்டியதில்லை. நீயே காணப்போகிறாய் ஆகையால் நீ அந்தப்பெண்ணை உன் மகனுக்குக் கலியாணம் செய்து வைப்பாய் அதுவுமின்றி அந்த விக்கிரமசோழனை அவனுடைய ராஜ்யத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ப் பட்டாபிஷேகம் செய்துவைப்பாய் என்று கட்டளையிட்டுப் போயினள். இந்தக் கனவைக் கண்ட அரசன் மகிழ்ந்தவனாய்த் தனது பரிவாரங்களுடன் காஞ்சி நகரத்துக்கு வந்து விக்கிரம சோழமகாராஜனைக் கண்டு இவன் சாக்ஷாத் தேவியினுடைய அருள் பெற்றிருப்பவனாதலால் இவன் நம்மால் பணியத்தக்கவன் என்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தேவியினுடைய கட்டளையைத் தெரிவித்து அதன் பின் தேவிக்குச் செய்யவேண்டிய பூஜோபசாரங்களை